# பொதுக்காலம் 26ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பொதுக்காலம் 26-ஆம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு வந்திருக்கும் அன்புள்ளங்களே! கடவுள் உலகைப் படைத்து மனிதனை உலாவவிட்ட நாளிலிருந்தே இரக்கமற்ற செயல்கள் நடந்து கொண்டுகான் இருக்கின்றன. இறைவனிடம் இருந்து இலவசமாக பெற்றதனைத்தும் தனக்கு மட்டும் தான் சொந்தம் என நினைக்கிறான் மனிதன். இந்த பணம் பட்டம், பதவி இவையெல்லாம் எங்கிருந்து வந்தது? இதை நமக்கும் பிறருக்கும் பயனளிப்பதாக மாற்ற வேண்டாமா? கடவுள் கொடுத்த வளங்களைப் பயன்படுத்தி விண்ணகத்தையும் மண்ணகத்தையும் சம்பாதிப்போம்.

வறுமையின் பிடியில் வாழ்ந்தவனை நினையாமல் தன் களஞ்சியத்தை இடித்து கட்ட நினைத்தவன் அன்றே இறந்து போனான் என நற்செய்தியில் (லூக்கா 12:3-21) நாம் வாசிக்கிறோம். இரக்கத்தை ஆடையாக கொண்டவர்கள் இறந்தும் வாழ்கின்றார்கள். விண்ணுலகில் ஆபிரகாமின் மடியில் அமர விரும்புகிறவர்கள் ஏழையின் வாழ்வை நினைத்து பார்ப்பார்கள்.

“காசே தான் கடவுளப்பா, அது கடவுளுக்கும் தெரியுமப்பா...” என்று சொல்லி நம்மையே நாம் பணத்திற்காக நியாயப்படுத்திக் கொள்ளாமல் இரக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம். ஏழைகள் நலனுக்காகவும், நற்செய்தி அறிவிப்பு பணிக்காகவும் உதவ முன் வருவோம். மனித நேயச் செயல்களை ஊக்குவித்து, தோழமையின் அன்பியமாய் இந்த உன்னத பலியில் பங்கெடுப்போம். அயலானை அன்னியனாகப் பார்க்காமல், அகிலத்தை படைத்த ஆண்டவனின் பிள்ளைகளாக பார்ப்போம்.

## முதல் வாசக முன்னுரை: ஆமோஸ் 6: 1, 3-7

ஆமோஸ் இறைவாக்கினர் நீதியின் இறைவாக்கினர் என்று அழைக்கப்படுபவர், நீதியையும் நேர்மையையும் வளர்த்து கொண்டாலன்று எந்த இனமும் கடவுளின் கடும் தண்டனைக்கு உள்ளாகும் என்று எச்சரிக்கை விடுக்கின்றார். இஸ்ரயேல் மக்களின் குற்றங்களைக் குறித்து பல முறை எடுத்து கூறியும் அவர்களிடையே எந்த மனமாற்றமும் ஏற்படவில்லை. கடவுளையும் ஏழை மக்களையும் புறம் தள்ளி விட்டு தங்களது செல்வத்தை மட்டும் நிலையாக கருதுபவர்களுக்கு அறிவுரை வழங்கும் முதல் வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: 1 திமொத்தேயு 6: 11-16**

திருத்தூதர் பவுல் உரோமை சிறையில் இருந்த போது, தன்னுடைய நண்பர் திமொத்தேயுவுக்கு எழுதிய கடிதம் இன்றைய இரண்டாம் வாசகமாக அமைகிறது, அந்நாட்களில் பலவித துன்ப சூழல்களின் மத்தியிலும் மக்களை திறம்பட வழிநடத்தியவர் திமொத்தேயு "விசுவாசம் என்னும் போராட்டத்தில் ஈடுபட்டு நிலை வாழ்வை உறுதியாக பற்றிக் கொள்" என தன் நண்பருக்கு மட்டுமல்ல, நமக்கும் எடுத்து சொல்லும் புனித பவலடியாரின் அறிவுரைகளை கவனமுடன் கேட்டு நம் வாழ்வாக்குவோம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்புத் தந்தையே எம் இறைவா!

எம் கத்தோலிக்க திரு அவையை வழி நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் ஏழை எளிய மக்கள்மீது அன்பு கொண்டவர்களாக இருக்கவும், எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கம் நிறைந்தவரே எம் இறைவா!

எம் நாடு அறிவியலிலும் தொழில் நுட்பத்திலும் முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்தாலும் இன்னும் ஏழைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் ஏழ்மை நிலை அறிந்து, அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் அதிகமாக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நல்ல திட்டங்களை தீட்டும் ஞானத்தை எம் ஆட்சியாளர்களுக்கு வழங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அருள் நிறைந்தவரே எம் இறைவா!

போதிய பொருளிருந்தும் அடுத்தவருக்கு உதவ மனமின்றி விலகி சென்ற தருணங்களுக்காக மனம் வருந்துகின்றோம். உமது படைப்புகளாகிய நாங்கள் எங்களிடம் குடிகொண்டிருக்கும் பேராசை, சுயநலம், அவநம்பிக்கை, மன உறுதியின்மை முதலியவற்றை களைந்து நீதி, இறை நம்பிக்கை, மன உறுதி, பணிவு

ஆகிய நற்பண்புகளை நாடித் தேடும் மனிதர்களாக வாழ வரம் தரவேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பும் ஆற்றலும் நிறைந்தவரே எம் இறைவா!

அயலானை அன்னியனாக பார்க்காமல் எமக்கு அடுத்திருப்பவரில் உமது அழகிய திருமுகத்தைக் காணவும், எமது ஆன்மீக வழிகாட்டிகளிடம் நாங்கள் பெற்றுக் கொள்ளும் அறிவுரைகளை எங்கள் காதுக்குள் மட்டும் அடைத்து வைக்காமல் எங்கள் வாழ்வில் அதை செயலாற்றி, உமக்குகந்த கிறிஸ்தவ வாழ்விற்கு சாட்சிகளாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. மாண்பு நிறைந்தவரே எம் இறைவா!

நல்லதை செய்து நற்செயல்கள் என்னும் செல்வத்தை சேர்க்கும் நல்மனத்தோராய் எம்மை மாற்றியருளும். நாங்கள் ஊர்களிலும், பங்குகளிலும், இல்லங்களிலும், எங்கள் பகிர்ந்தளிக்கும் பண்பை நிறைவாய் வளர்த்து, ஒற்றுமை, சமாதானம், சகிப்புத் தன்மை நிறைந்த மக்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி. ஜெயின் வேலாயுதம், புளியரை, செங்கோட்டை மறைப்பணித்தளம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com